# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.104/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 8 | நாள் | : | 08.06.2026 |
| பெயர் | : | வல்சலாம் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ கணவர் பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 08th day of June 2026.

**சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பணி ஓய்வு பெற்று தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 22.06.2019 ம் தேதி மாலை 5 மணிக்கு நான் நிலைய பொறுப்பிலிருந்தபோது இராஜபாளையம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவலை பெற்று மாங்குடி எட்டன் மகன் மாரிமுத்து என்பவர் குறித்த தகவலை பெற்றுக் கொண்டு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த மேற்படி நபரை சந்தித்து விசாரித்தபோது அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து இரவு 8 மணிக்கு நிலையம் திரும்பி மேற்படி புகார்

வாக்குமூலத்தின் தன்மைகேற்ப நிலைய கு.எண்.212/2019 வழக்கின் பிரிவு 294(பி), 323, இதச மற்றும் உ/இ.3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC / ST (PREVENTION OF ATROCITIES) ACT, -ன் கீழ் முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். வாக்குமூலம் பதியும்போது உடனிருந்த சாட்சி பார்வதி என்பவரிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்னர் அசல் முதல் தகவலறிக்கையையும் , புகார் மனுவையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு வழக்கானது தீண்டாமை வன்கொடுமை தொடர்பு குறித்த வழக்கு என்பதால் இது குறித்து விசாரணை அலுவலரை நியமிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலருக்கு விசாரணை நகலை அனுப்பி வைத்தேன். என்னை புலனாய்வு அலுவலர் விசாரித்தார். நான் பதிவு செய்த வாக்குமூலம்தான் அ.சா.ஆ.1 ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

சாட்சி கன்னியாகுமரி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றம், நாகர்கோவில் காணொளி அறையில் இருந்து காணொளி காட்சி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் திருமதி/செல்வி.பிரியதர்ஷினி (Typist), Kanniyakumari District Court, Nagercoil என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் முதல் நிலை எழுத்தர் நிலை எண்-1 முருகன் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.06.08 18:46:32 +0530